# அறவழி

NONVIOLENCE

வெளியீடு
அறவழிப் போராட்டக் குழு
அஞ்சல் பெட்டி எண்: 2
சாவகச்சேரி

அறம் 1 மாத இதழ் * 1987 தை பக்கம் 12 * விலை 2-00 வழி 9

VANNARPANNAI BRANCH LIBRARY
MUNICIPAL COUNCIL
JAFFNA

VANNARPANNAI BRANCH LIBRARY
MUNICIPAL COUNCIL
JAFFNA

## பல்கலைக் கழகங்களில் காந்தீயக் கல்வித்துறை

## அறவழி இயக்கம் கோரல்

பல்கலைக் கழகங்களில் "காந்தீயக் கல்வித் துறை"யை ஏற்படுத்த வேண்டுமென சமுதாய மாற்ற நிறுவனமாகிய அறவழிப் போராட்டக்குழு, பல்கலைக்கழகங்கள் தொடர்பான உயர் அதிகாரிகளைக் கோரியுள்ளது.

காந்தி மகானின் போதனைகள் மலை போன்றது. அவரின் போதனைகள் சிந்தனைகள் மக்களின் எதிர்கால வாழ்வுக்கு உறுதுணையாக இருத்தல் வேண்டும்.

இந்தியாவில் இருக்கின்ற பெரும்பாலான பல்கலைக் கழகங்களில் காந்தியக் கல்வித்துறைகள் வெற்றிகரமாக இயங்கிவருகின்றன.

இதேபோன்று எமது பிரதேசங்களில் இருக்கின்ற பல்கலைக்கழகங்களிலும் காந்தியக் கல்வித்துறைகள் ஏற்படுத்தப்பட்டு, அங்கு கிராமிய பொருளாதாரம், கிராம நிர்மாணப் பணிகள், காந்தியக் கல்விமுறை போன்ற பாடங்கள் புகட்டப்படல் வேண்டும் எனவும் அறவழி இயக்கத்தினர் தம் கோரிக்கையில் தெரிவித்துள்ளனர்.

**உள்ளே**

**1987**

**கலண்டர்**

## உங்களுடன் ஒரு நிமிடம்

"அறவழி"யின் அன்பு வணக்கமும் புது வருட – பொங்கல் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

"அறவழி" பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டு எட்டு மாதங்கள் பூர்த்தியாகி, ஒன்பதாவது மாதத்தில் காலடி எடுத்து வைத்துள்ளது. கடந்த எட்டுமாத காலத்தில் எம் பத்திரிகையின் பணியினைப் பாராட்டி எம்மைப்பலர் ஆக்க – ஊக்கப்படுத்தியுள்ளனர்.

பத்திரிகையின் வளர்ச்சிப்பாதையில் தாங்கள் எமக்கு அளித்துவருகின்ற விசுவாசமான அன்பு - ஆதரவை நாம் மிகவும் மதிக்கின்றோம்.

நெருக்கடிமிக்க காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்கள் மத்தியில் "அறவழி" தொடர்ந்தும், தனது காத்திரமான பணியினைத் தொடர்ந்து முன்னெடுக்கும் என இச்சந்தர்ப்பத்தில் தங்களுக்கு உறுதி கூறுகின்ற வேளையில், எமது பாசத்துக்குரிய வாசகர்களாகிய தாங்கள், தொடர்ந்து எம்பணி சிறக்க, விரிவடைய தங்களால் ஆன ஆதரவைத் தொடர்ந்தும் வழங்கி மேலும் எம்மை ஊக்குவிப்பீர்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை எம் இதயங்களில் துளிர்விட்டுக் கொள்கின்றது.

தமிழ் சமுதாயத்தில் நிரந்தர விடிவை ஏற்படுத்தவும், சமுதாயத்தில் நல் கருத்துக்களை விதைத்து மக்களை நல்வழிப்படுத்தவும் "அறவழி" தொடர்ந்தும் பாடுபடும் என்று கூறி, "அறவழி" இதழ் 9ஐ தங்களின் பாதங்களில் சமர்ப்பித்துக் கொள்கின்றோம்.

— ஆசிரியர் குழு —

# அறநோக்கில்

## சமாதானக் கல்வி

சமாதானம் என்றால் என்ன?

இதனை நாம் ஒவ்வொருவரும் வெவ்வேறான பொருள்பட புரிந்து கொள்கின்றோம். சமாதானம் ஏற்படவேண்டும் என்று நாம் யாவரும் ஆவலுடன் காத்திருக்கின்றோம். அதேவேளை சமாதானம் தொடர்பாக எம் ஒவ்வொருவரினதும் எதிர்பார்ப்புகளும் வெவ்வேறானவையாக உள்ளன.

எம் மக்கள் மத்தியில் சமாதானத்தை நிலைகொள்ளச் செய்யவேண்டும். சமாதான வாழ்வின் முக்கியத்துவம் பற்றிய தெளிவுநிலையையும், விழிப்புணர்வையும் நாம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டியது மிகவு அவசியமான தொன்றாகவுள்ளது.

சமாதானக் கல்வியானது இன்று சர்வதேச மட்டத்தில் பிரபல்யம் பெற்று வருகின்ற இன்றைய காலகட்டத்தில் எம் சமுதாயத்தில் வாழ்கின்ற மக்கள் மத்தியிலும் சமாதானக் கல்வி ஊட்டப்படல் வேண்டும்.

எம் பிரதேசத்தில் இருக்கின்ற கல்விக் கூடங்களில் கல்விபயில்கின்ற மாணவர்கள் மத்தியில் சமாதானக்கல்வி ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். அதன் மூலம் சமுதாயத்தின் எதிர்காலச் சிற்பிகளாக விளங்கப்போகின்றவர்களின் மனத்தில் சமாதானத்தின் அவசியம், முக்கியத்துவம், பொருள் என்பனவற்றினை உணரச் செய்ய முடியும்.

சமுதாயம் என்னும் சோலையில் சமாதானம், நல்லெண்ணம் என்னும் இழைகளை பின்னவேண்டுமாயின் மனித இனத்தினை இதற்கேற்ற சிறந்த நெசவாளிகளாக நாம் பயிற்றுவிக்க வேண்டும்.

இப்பணியினை நாம் செய்வதற்கு சமாதானக் கல்வியை, எம் கல்விக்கூடங்களில் காலதாமதமின்றி அறிமுகப்படுத்த ஆவன செய்யவேண்டும்.

சமாதானம் என்றால் என்ன? சமாதானக் கல்வி என்றால் எத்தகையது? அவற்றினை எவ்வாறு மக்கள் மத்தியில் பரப்பி, மக்களுக்கு உதவக்கூடும்? என்பது பற்றி, எம் மத்தியில் வாழ்கின்ற கல்விமான்கள், பேராசிரியர்கள் தீவிரமாகச் சிந்தித்துச் செயல்பட வேண்டும் என ''அறவழி'' விரும்புகின்றது.

## குழந்தைகள் பற்றி நேருஜீ

உலகெங்கிலும் உள்ள குழந்தைகள் பல மொழிகளைப் பேசுகின்றனர்: பலவிதமான ஆடைகளை அணிகின்றனர்.

ஆனால்—

ஒரு குழந்தை, மற்றொன்றை அன்புடன் விரும்புகிறது.

குழந்தைகளை விளையாடும் போது பாருங்கள்

சேர்ந்து விளையாடும்; அவர்களுக்குள்ளாகவே சிறு பூசல்கள் வரும்; கோபித்துக்கொள்ளும்.

ஆனால்—

அந்தக் கோபம் கூட ஒருவித விளையாட்டுத் தான்.

இனம், மதம், உயர்வு—தாழ்வு என்ற எவ்வித பாகுபாட்டையும் குழந்தைகள் எண்ணுவதில்லை.

அன்னையை விட, அப்பாவை விட புத்திசாலித் தனமாக நடந்து கொள்வார்கள் அவர்கள்.

ஆனால் அவர்கள் வளரும்போது அந்த சகோதர பாசம் சிறிது, சிறிதாக அவர்களிடமிருந்து மறைய ஆரம்பிக்கிறது.

காரணம்—

பெரியவர்கள் சொல்லிக்கொடுக்கின்ற சில வழிமுறைகள் தான்.

வாழ்க்கைக்கு அவசியமானவற்றை பள்ளியில் கற்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால்—

அதேசமயத்தில் மனித இனத்திற்கே தேவையான இரக்க குணத்தைப் படிப்படியாக விட்டுவிடுகிறார்கள்.

## காந்தியின் கடிதம் ஏலத்தில்

மகாத்மா காந்தியினால் எழுதப்பட்ட பல கடிதங்கள் டிசம்பர் மாத நடுப்பகுதியில் லண்டன் மாநகரில் ஏலத்தில் விடப்பட்டன.

இவ்வாறு ஏலத்தில் விடப்பட்ட காந்தியின் கடிதங்களை இந்தியாவின் தூதுவர் திரு. அலெச்சாண்டர் ஒரு லட்சத்து நாற்பதாயிரம் பவுண் செலுத்திப் பெற்றுக் கொண்டார்.

ஏலத்தில் பெறப்பட்ட இக்கடிதங்களை இந்திய அரசு, இந்தியாவில் இருக்கும் காந்தி மியூசியத்திற்கு வழங்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ரகசியப் போரில்

# எமது மக்கள் அழிக்கப் படுகின்றனர்!

''பங்களாதேஷில் சிட்டகொங் மலையடிவாரப் பகுதியில் வாழ்கின்ற 700,000 மக்கள் சொந்த நாட்டில் சுதந்திரமாகவும்,, சமாதானமாகவும் வாழ முதலில் அனுமதிக்கப்படல் வேண்டும். அதன் பின்னரே எமது மக்களின் எதிர்காலம் பற்றிய விடயங்களை யிட்டு நாம் சிந்திக்க முடியும்''

இவ்வாறு, பங்களாதேஷில், சிட்டங்கொங் மலையடிவாரப் பகுதியில், அம்மக்களின் உரிமைப் போராட்டத்திற்காக அறவழியில் போராடிக்கொண்டிருக்கின்ற சக்மா இனத்தைச் சேர்ந்த பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு பௌத்த அன்பர் கூறியுள்ளார்.

சிட்டங்கொங் மலையடிவாரப் பகுதியில் வாழ்கின்ற மக்களின் துன்பியல் சம்பவங்கள் பற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில்,

''இங்கு வாழ்கின்ற பௌத்த சமய மக்களை எதிர் காலத்தில் வாழவிடாமல் செய்வதையே தமது முழு நோக்கமாமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்ற அரசின் மனிதபிமானமற்ற செயல்களை இந்த உலகில் இருக்கின்ற ஏனைய நாட்டு அரசாங்கங்கள், கண்டும் காணுமல் இருப்பதையிட்டு மனிதாபிமான முள்ளவர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டியுள்ளதே'' என்று கவலையுடன் கூறி இவ் அன்பர் மேலும் கூறுகையில்.

''சிட்டகொங் மலையடிவாரப் பகுதியில் இருக்கின்ற கிராம மக்கள் மீது நடாத்தப்படுகின்ற அரச தாக்குதல்கள் பல்வேறு வகைப்பட்டதாகக் காலத்துக்குக் காலம் அமைகின்றன. கிராமங்களுக்கு வருகின்ற அரசபடையினர் மக்களை ஒரு பொதுவான இடத்தில் கூடுமாறு செய்து வயதுப்பிரகாரம் குழுக்களாக நிறுத்தி தமது தாக்குதல்களை மேற்கொள்கின்றனர். படையினரின் தாக்குதல்களுக்கு அஞ்சித் தப்பிக்க முயல்பவர்கள் மிகக் கொடுமையாகச் சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டு அவர்களது எதிர்கால வாழ்க்கை முடமாக்கப்படுகின்றது. ஏனையோர், ஸ்தலத்திலேயே சுடப்படுகின்றனர்''

''1980-ம் ஆண்டு பங்குனி மாதம் 25-ம் திகதி அரசபடையினர் ஒரு குறிப்பிட்ட கிராமத்திற்கு வந்தார்கள். மக்களை, கிராமத்தில் இருக்கும் பௌத்த விகாரைக்கு வரவழைத்தனர். அங்கு சுமார் 300 பேர் கூடினர். கணப்பொழுதில் அத்தனைபேரும் சுட்டுக் கொல்லப்பட்டதுடன், பௌத்த விகாரையும் சேதமாக்கப்பட்டது.

இவைபோன்ற கொடூர சம்பவங்கள் இங்கு அடிக்கடி நிகழ்ந்துகொண்டிருக்கின்றன.

பங்களாதேஷின் அபிவிருத்தித் திட்டங்களுக்கென வெளிநாடுகளால் வழங்கப்படுகின்ற நிதி உதவிகள் இப்பகுதிகளில் வாழ்கின்ற மக்களைக் கொல்வதற்கும், அரசபடையினருக்குப் பயிற்சிகள் வழங்கவுமே பயன் படுத்தப்பட்டு வருகின்றன.''

''நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்ற நிலத்தினை தம தாக்கிக் கொள்ளவும், அங்கு பௌத்த சமயத்தினை வேரூன்றச் செய்யாது தவிர்க்கவுமே இவ்வாறான கொடுமைகளை அரசு செய்து கொள்கின்றது என்பது தெரிகின்றது.''

அண்மையில் கூட, பங்களாதேஷ் அரசு 50,000 மக்களை இங்கு குடியமர்த்தி, மக்களுக்கு ஆயுதப்பயிற்சியும் வழங்கி, ஆயுதங்களையும் வழங்கி உள்ளது.

''இங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற ரகசியப் போர் பற்றிய தகவல்களை இவ் உலகில் வாழ்கின்ற ஏனைய மக்களும் தெரிந்து கொண்டு, இந்த ரகசியப் போரைத் தடுத்து நிறுத்த சர்வதேச அமைப்புகளும், நாடுகளும் நடவடிக்கை எடுத்தல் விரும்பத்தக்கது'' என, இப் பௌத்த அன்பர் தெரிவித்துள்ளார்.

## சிட்டக்கொங் மலையடிவார மக்களின் துன்பியல் நிகழ்வுகள்

''1963-ம் ஆண்டு காலப்பகுதியில் ஆரம்பமாகிய சித்திரவதைகள், கொடுமைகள் தொடர்பாக இன்று வரை சுமார் 200,000 மக்கள் இறந்துள்ளனர். மீதமாக இருக்கும் மக்களில் இங்கு இடம்பெறுகின்ற ரகசியப் போர்த்தாக்குதல்கள் காரணமாக சுமார் 30,000 மக்கள் அகதிகளாக இந்தியாவுக்குச் சென்று வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இவற்றைவிட, இங்கு வாழ்கின்ற மக்களுக்கு அடிப்படைச் சுகாதார வசதிகள் எதுவும் இல்லாததன் காரணமாக, வாந்திபேதி, மலேரியா போன்ற தொற்று நோய்களால் பீடிக்கப்பட்டு தினமும் பல நூற்றுக்கணக் கணக்கான மக்கள் இறந்து வருகின்றனர்.

அரசபடைகளின் தாக்குதல்களுக்கு அஞ்சி, இன்னமும் சுமார் 20,000 பேர் காடுகளில் வாழ்ந்துகொண்டிருக்கின்றுர்கள்;

சிட்டகொங் மலையடிவாரப் பகுதியில் இருக்கின்ற பல கிராமங்கள் நீரினுல் அள்ளப்பட்டும், அரச படைகளால் அழிக்கப்பட்டும் விட்டன. வாழ்வா? சாவா? என்ற ரீதியில் இப்பகுதி மக்கள் சொல்ல வொண்ணுத் துயரங்களை அனுபவித்து வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

மேற்கத்திய பொருளாதாரத்தைப் படித்தவர்களுக்கு மேற்போக்காகப் பார்த்தாலே காந்தியப் பொருளாதாரம் அதிலிருந்து மாறுபட்டிருப்பது தெரியும். பெரும்பாலும் மேலைநாட்டு அறிஞர்கள் பொருளாதாரத்தைத் தனி இயலாக வளர்க்கத் தொடங்கிய பிறகு தங்களுக்கென்று ஒரு வரையறையை — வரம்பை — எல்லையை அமைத்துக் கொண்டு அந்த வட்டத்திற்குள் வருகின்ற மனித நடவடிக்கைகளை ஆய்கின்றனர்.

அடம்ஸ்மித் நாடுகளின் செல்வ வளர்ச்சியை அதற்கான மூலங்களை, செய்திகளைப் பற்றி ஆராய்வதுதான் பொருளாதாரத்தின் பணி என்று கருதினர். ஆனால் ரஸ்கின், கார்லைல் போன்றவர்கள் இந்த அணுகு முறையைச் சாடியதால் செல்வத்தோடு கூட மனித நலனையும் பற்றிப் பயில்வதுதான் பொருளாதாரம் என்ற இலக்கணத்தை ஆல்பிரட் மார்ஷல் உருவாக்கிக் கொடுத்தார். மனித நலக் கருத்தில் குறை கண்ட லயனல் ராபின்ஸ் 1. மனித விருப்பங்கள் எண்ணற்றவை. 2. ஆனால் அவற்றை அடைவதற்குரிய சாதனங்கள் அளவோடு இருக்கின்றன. 3. அளவாக இருக்கின்ற சாதனங்களை ஏதாவது விருப்பங்களை நிறைவு செய்ய மாற்றிப் பயன் படுத்தலாம். 4. எந்த விருப்பங்களை முதலில் நிறைவு செய்வதென்பதைத்

சத்திய சோதனையில் "தனி மனித ஒழுக்க நலனையோ நாட்டின் ஒழுக்க நலனையோ கெடுக்கின்ற பொருளாதாரம் ஒழுங்கற்றதாகவே இருக்கும், ஆகையால் அது பாவமானதாக இருக்கும் என்று கூறுகின்றார். காந்தியடிகள் பொருளியலில் அறக் கருத்துக்களை மிகுதியும் வலியுறுத்தியதற்குக் காரணம் உண்டு. தொழிற் புரட்சிக்குப் பின்னால் பொருளியல் சிந்தனையின் செல்வாக்கு மிகுந்தது. வழிமுறைகளையும், மனித குலத்தைப் பாதிக்கின்ற விளைவுகளையும் பற்றிக் கவலைப் படாமல், செல்வத்தைத் தேடிக் குவிப்பதிலேயே கவனம் செலுத்துகின்ற போக்கு தனிமனித வாழ்விலும் பொது வாழ்விலும் தலை தூக்கி விட்டது.

எந்திரங்களைக் கண்டு பிடித்ததும், தொழிற்சாலைகளின் வளர்ச்சியும், மக்களின் தேவைகளைப் பற்றிக் கவலைப்படாமல் இலாப நோக்கில் பெருகிய உற்பத்தியும், சந்தைகளைப் பிடிக்க ஏற்பட்ட போர்களும், நாடுகளை அடிமைப்படுத்திய கொடுமையும், மனிதர்களை மனிதர்கள் சுரண்டும் போக்கும், வளமும் வறுமையும் வளர்ந்த விதமும் பொருளாதார நடவடிக்கைகளை இயக்கிய தன்னல நோக்கமும் இவை போன்ற பிறவும் பொருளாதாரத்தின் கூறுகளாக இருப்பதினை காந்தியடிகள் உணர்ந்தார். மனிதனுக்குத் துணை செய்ய வேண்டிய பொருளாதாரம் மனிதனை மூச்சுமுட்டித்

**காந்தியப் பொருளாதாரம் புதுமையானதும் — புரட்சிகரமானதும் ஆகும்**

தீர்மானிக்க வேண்டும் என்கின்ற நான்கு கருத்துக்களின் அடிப்படையில் பொருளாதார இயல் அமைகின்றதென்று கூறுகின்றார். வேறு வகையில் சொன்னால், நமக்கு வேண்டிய பொருட்கள் பற்றாக்குறையாக - கிடைப்பருமையாக (Scarcity) இருப்பதால் தான் பொருளாதாரம் தனி இயலாக இருக்கின்றதென்பது அவரது கருத்து: அறக் கோட்பாடுகளுக்குப் பொருளாதாரத்தில் இடமில்லை என்ற முடிவோடு லயனல் ராபின்ஸ் பொருளியலுக்கு விளக்கம் கூறுகின்றார்: இதனைப் பின்பற்றியே மேற்கத்தியப் பொருளியல் சிந்தனை வளர்ச்சி பெற்றிருக்கின்றது.

காந்தியப் பொருளாதாரத்தின் உயிர் நாடியாக அறம் விளங்குகின்றது. அகிம்சையும் சத்தியமும் காந்தியத்தின் இரு கண்கள். இவற்றைப் பொருளியல் துறையிலும் புறக்கணிக்க இயலாது. வன்முறையை வளர்க்கின்ற வன்முறைக்கு இடம் தருகின்ற பொருளாதார அமைப்புமுறையை நடவடிக்கைகளைக் காந்தியடிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. சத்தியத்திலிருந்து விலகிச் செல்கின்ற எதுவும் மனித குலத்திற்கு நிலையான நன்மையை விளைவிக்காது என்பதைக் காந்தியடிகள் வலியுறுத்திக் கூறுகின்றார்.

காந்தியடிகள் *1921*ஆம் ஆண்டிலேயே ஒழுக்க மதிப்புகளைப் புறக்கணிக்கின்ற, மதிக்காத பொருளாதாரம் பொய்மையானதாகவே இருக்கும் (Young India 13. 10. 1921) என்று கூறினர். அவர் தனது

திக்குமுக்காடச் செய்கின்ற நிலையினை அறிந்தார். இதற்கெல்லாம் காரணம் பொருளியல் ஓர் அறிவியலென்ற எண்ணத்தில் அறிவியலை விட்டு விலகிச் சென்றதுதான் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டார். இன்றையப் பொருளாதார நடவடிக்கைகள் மனிதனின் ஆன்மாவை அழிக்கின்ற வகையில் இருப்பதனைச் சுட்டிக் காட்டுவதைத் தமது கடமையாகக் கருதினர்.


நான் பொருளியலுக்கும் அறிவியலுக்கும் இடையில் எந்தப் பிரிவினையையும் வேறுபாட்டையும் வகுத்துக் கொள்ளவில்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும், உண்மையான பொருளாதாரம் எப்பொழுதும் உயர்ந்த அற நிலைக்கு எதிராக இருக்காது. அதே போல உண்மையான எல்லா அறங்களும் அவற்றின் பெயருக்கேற்ப இருக்க வேண்டுமென்றால் அவை நல்ல

(தொடர்ச்சி 10-ம் பக்கம்)

## காந்தியப் பொருளாதாரத்தின் இயல்பும் பரப்பும்

பேராசிரியர் மா. பா. குருசாமி

## உண்மையான சமயம்



“தீயவர்கள் பல தீமைகளைச் செய்து கொண்டே தாம் மிகவும் சமயப்பற்று உள்ளவர்கள் என்று பெருமை பாராட்டிக் கொள்கிறார்கள். பிராட்லோ போன்ற சிலர் மிக நல்லவர்களாகவும் அறவோராகவும் வாழ்ந்தும், தம்மை நாத்திகர் என்றே சொல்லிக் கொள்கிறார்கள். இந்த இரண்டு கருத்தும் பொருந்தாதவைகளே. முன் சொன்னவர்கள் தம் தீமைகளை சமயப் போர்வையால் மறைத்து விடுகின்றார்கள். ஆகையால் மக்கள் வாழ்க்கைக்கு அவர்கள் இடையூறானவர்கள். சமயமும் அறநெறியும் எப்போதும் கைகோத்துக்கொண்டே செல்லவேண்டும்.

உண்மையான சமயம் அறநெறியே, உண்மையையும் அறத்தையும் விடப் பெரிய சமயம் ஒன்றுமில்லை,

ஒருவர் கடவுள் இருப்பதாக உடன்பட்டுப் பொய்யும் தீமையும் கலந்த வாழ்க்கை நடத்துகிறார்; மற்றொருவர் அவரைப்பற்றி அறியாமல் உண்மையும் அறமும் நிறைந்த வாழ்க்கை நடத்துகிறார் என வைத்துக்கொள்வோம், இந்த இருவகையில் எவர் சமயப்பற்றும் அறநெறியும் உடையவர்? கடவுளுக்கு வாய்வழிபாடு மட்டும் செய்கிறவர் நாத்திகரைவிடப் பிற்போக்கானவர். மற்றவர் கடவுளின் ஆணைப்படி நடப்பார். ஆகையால், அவரே சிறந்த கடவுளன்பராகக் கருதவேண்டும், ஆகையால் சமயம் என்பதும் அறிவு என்பதும் ஒன்றே’’

— **மகாத்மா காந்தி**

## நியூயோக்கில் காந்தி சிலை

மகாத்மா காந்தியின் 117 பிறந்த தினத்தன்று அமெரிக்காவின் தலைநகரங்களில் ஒன்றான நியூயோக்கில் எட்டு அடி உயரமான வெண்கல சிலை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வட அமெரிக்காவில் நிறுவப்பட்டுள்ள முதலாவது காந்தி சிலையானது, காந்தி கதர் ஆடை தரித்து. சால்வை போர்த்திக்கொண்டு, தடி ஊன்றி நடந்து செல்வதுபோல அமைக்கப்பட்டுள்ளது.

‘‘உண்மையான அன்பான சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் பணியில் ஈடுபட்டிருந்த காந்தி மகானின் சிலையானது அமெரிக்க மக்களுக்கு அவரின் சிந்தனைகள், சொல், செயல்கள் என்பனவற்றைத் தினமும் ஞாபகமூட்ட உதவியாக இருக்கும்’’ என சிலை திறப்புவிழாவில் பங்கு கொண்டிருந்த சகோதரத்துவ ஒத்துழைப்பு இயக்கத்தின் (FOR) பிரதிநிதி திரு. பேயாட் றஸ்ரின் கருத்துத் தெரிவிக்கும்போது தெரிவித்தார்,

வட அமெரிக்காவில் இருக்கும் ஆயிரக்கணக்கான அறவழி,சமாதான மனித உரிமைகள் இயக்கங்களின் பிரதிநிதிகள் இவ்வைபவத்தில் பங்கு கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## அறவழி ஆசிரியர்கள் விடுதலை

சர்வதேச போர் எதிர்ப்பாளர இயக்கத்தின் (WRI) நோர்வே நாட்டுக்கிளை (FMK) யினால் வெளியிடப்படும் “அறவழி” (IKKEVOLD) எனும் பெயரிலான பத்திரிகையின் ஏழு ஆசிரியர்களும், நோர்வே நாட்டு அரச படையினரால் கைது செய்யப்பட்டு, மேல் நீதிமன்ற விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டுள்ளார்,

நோர்வேயில் நிலைகொண்டிருக்கும் அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் தளம்பற்றிய தகவல்களைக் கொண்ட தொடர் கட்டுரைகளைப் பத்திரிகையில் பிரசுரித்ததன் மூலம் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்களை ஏற்படுத்தினார்கள் எனவும், நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகளை சீர் குலைக்கும் வகையில் செய்திகளை வெளியிட்டார்கள் எனவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தனர்.

இவ் ஏழு ஆசிரியர்களுக்கும் எதிரான விசாரணை மேல் நீதிமன்றத்தில் நடைபெற்ற சமயம், ஆயிரக்கணக்கான அறவழி, சமாதானக் கொள்கைகளைப் பின்பற்றுவோர் நீதிமன்றத்தை முற்றுகையிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## வருடாந்த ஒன்று கூடலும் கிறிஸ்மஸ் விழாவும்

அறவழித் தொண்டர்களின் வருடாந்த ஒன்று கூடலும் கிறிஸ்மஸ் விழாவும் டிசம்பர் மாதம் 27-ம் திகதி அறவழி பணிமனையில் நடைபெற்றது.

இவ்வைபத்தின் போது சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் தலைவரும், பிரபலமிக்க ஆயுள்வேத டாக்டருமான பே. பிலிப்ஸ் முதன்மை விருந்தினராகவும், பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் திரு. க. நடராசா, சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. க. துரைராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் பங்கு கொண்டிருந்தனர்.

அறவழி இயக்குனர்கள், அவர் தம் துணைவிமார், பணிமனைத் தொண்டர்கள், ஆசிரியைகள் போன்றோர் இந்நிகழ்ச்சிகளில் சமுகமளித்து வைபவத்தினை சிறப்பித்தனர்.

இவ்வைபவத்தின் போது பங்குகொண்டிருந்த முதன்மை விருந்தினர்கள் இயக்கத்தின் பணிகளை மெச்சிப் பாராட்டியதுடன், எதிர்காலத்திலும் தமிழ் சமுதாயத்திற்கு நல்ல பணிகளை இயக்கம் ஆற்றவேண்டும் என வாழ்த்தி ஆசீர்வதித்தனர்.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க. நடராசா, பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கு புதுவருட நாட்குறிப்புகளை வழங்கி அவர்களின் சேவையை ஊக்குவித்தார்.

இயக்குனர் திரு. வீ. எஸ். துரைராஜா தலைமையில் நெறிப்படுத்தப்பட்ட இவ்வைபவத்தினை, இயக்குனர் திரு. எஸ். தங்கராசா தனது நன்றியுரையுடன் நிறைவு செய்தார்.

அறவழி அன்பளிப்பு

# அறவழிப் போராட்டக்குழு


# NONVIOLENT DIRECT ACTION GROUP

P. O. BOX 2
CHAVAKACHCHERI

தபால் பெட்டி இல: 2
சாவகச்சேரி

தோற்றம்
FOUNDED
**25-02-1979**

## 1987



### எமது சேவைகள்

- கல்விப்பணி
- அறவழிப் பயிற்சி
- அகதிப் பணி
- பாலர் பாடசாலை
- சிரமதானம்
- நூலக சேவை
- அறவழி பத்திரிகை
- ஆங்கில பத்திரிகை
- பயிற்சிகள்
- வெளியீட்டுச் சேவை
- முதலுதவிச் சேவை
- காந்தியப் பண்ணை
- மகளிர் அமைப்பு
- விபத்து உதவி
- இன்னும் பிற

### OUR SERVICES

- EDUCATION
- NV TRAINING
- REFUGEES SERVICE
- PRE-SCHOOL
- SHRAMADHANA
- LIBRARY SERVICE
- ARAVALY
- NVDAG REPORT
- TRAINING
- PUBLICATION
- FIRST AID
- GHANDIYAN FARM
- WOMEN'S SECTION (NVWRO)

“சத்தியத்தையும் நேர்மையையும் விட மேலான தொரு மதமே கிடையாது. மிகச் சிறந்த ஒழுக்கம் அனைவருக்கும் இன்றியமையாதது” — காந்தி

## வருட நாள்காட்டி

**ஜனவரி**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞா | | 4 | 11 | 18 | 25 |
| தி | | 5 | 12 | 19 | 26 |
| செ | | 6 | 13 | 20 | 27 |
| பு | | 7 | ● | 21 | 28 |
| வி | 1 | 8 | 15 | 22 | 29 |
| வெ | 2 | 9 | 16 | 23 | 30 |
| ச | 3 | 10 | 17 | 24 | 31 |

**பெப்ரவரி**

| | | | | |
|---|---|---|---|---|
| ஞா | 1 | 8 | 15 | 22 |
| தி | 2 | 9 | 16 | 23 |
| செ | 3 | 10 | 17 | 24 |
| பு | 4 | 11 | 18 | 25 |
| வி | 5 | 12 | 19 | 26 |
| வெ | 6 | ● | 20 | 27 |
| ச | 7 | 14 | 21 | 28 |

**மார்ச்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞா | 1 | 8 | ● | 22 | 29 |
| தி | 2 | 9 | 16 | 23 | 30 |
| செ | 3 | 10 | 17 | 24 | 31 |
| பு | 4 | 11 | 18 | 25 | |
| வி | 5 | 12 | 19 | 26 | |
| வெ | 6 | 13 | 20 | 27 | |
| ச | 7 | 14 | 21 | 28 | |

**ஏப்ரல்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞா | | 5 | 12 | 19 | 26 |
| தி | | 6 | ● | 20 | 27 |
| செ | | 7 | 14 | 21 | 28 |
| பு | 1 | 8 | 15 | 22 | 29 |
| வி | 2 | 9 | 16 | 23 | 30 |
| வெ | 3 | 10 | 17 | 24 | |
| ச | 4 | 11 | 18 | 25 | |

**மே**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞா | 31 | 3 | 10 | 17 | 24 |
| தி | | 4 | 11 | 18 | 25 |
| செ | | 5 | 12 | 19 | 26 |
| பு | | 6 | ● | 20 | 27 |
| வி | | 7 | 14 | 21 | 28 |
| வெ | 1 | 8 | 15 | 22 | 29 |
| ச | 2 | 9 | 16 | 23 | 30 |

**யூன்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞா | | 7 | 14 | 21 | 28 |
| தி | 1 | 8 | 15 | 22 | 29 |
| செ | 2 | 9 | 16 | 23 | 30 |
| பு | 3 | 10 | 17 | 24 | |
| வி | 4 | ● | 18 | 25 | |
| வெ | 5 | 12 | 19 | 26 | |
| ச | 6 | 13 | 20 | 27 | |

**யூலை**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞா | | 5 | 12 | 19 | 26 |
| தி | | 6 | 13 | 20 | 27 |
| செ | | 7 | 14 | 21 | 28 |
| பு | 1 | 8 | 15 | 22 | 29 |
| வி | 2 | 9 | 16 | 23 | 30 |
| வெ | 3 | ● | 17 | 24 | 31 |
| ச | 4 | 11 | 18 | 25 | |

**ஆகஸ்ட்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞா | 30 | 2 | 9 | 16 | 23 |
| தி | 31 | 3 | 10 | 17 | 24 |
| செ | | 4 | 11 | 18 | 25 |
| பு | | 5 | 12 | 19 | 26 |
| வி | | 6 | 13 | 20 | 27 |
| வெ | | 7 | 14 | 21 | 28 |
| ச | 1 | ● | 15 | 22 | 29 |

**செப்ரெம்பர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞா | | 6 | 13 | 20 | 27 |
| தி | | ● | 14 | 21 | 28 |
| செ | 1 | 8 | 15 | 22 | 29 |
| பு | 2 | 9 | 16 | 23 | 30 |
| வி | 3 | 10 | 17 | 24 | |
| வெ | 4 | 11 | 18 | 25 | |
| ச | 5 | 12 | 19 | 26 | |

**ஒக்டோபர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞா | | 4 | 11 | 18 | 25 |
| தி | | 5 | 12 | 19 | 26 |
| செ | | ● | 13 | 20 | 27 |
| பு | | 7 | 14 | 21 | 28 |
| வி | 1 | 8 | 15 | 22 | 29 |
| வெ | 2 | 9 | 16 | 23 | 30 |
| ச | 3 | 10 | 17 | 24 | 31 |

**நவம்பர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞா | 1 | 8 | 15 | 22 | 29 |
| தி | 2 | 9 | 16 | 23 | 30 |
| செ | 3 | 10 | 17 | 24 | |
| பு | 4 | 11 | 18 | 25 | |
| வி | 5 | 12 | 19 | 26 | |
| வெ | 6 | 13 | 20 | 27 | |
| ச | 7 | 14 | 21 | 28 | |

**டிசம்பர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞா | | 6 | 13 | 20 | 27 |
| தி | | 7 | 14 | 21 | 28 |
| செ | 1 | 8 | 15 | 22 | 29 |
| பு | 2 | 9 | 16 | 23 | 30 |
| வி | 3 | 10 | 17 | 24 | 31 |
| வெ | ● | 11 | 18 | 25 | |
| ச | 5 | 12 | 19 | 26 | |

# சமாதானம்

— செல்வி. எஸ். சந்திராஜனி

ஒரு நாட்டின் சுபீட்சமான வழி நடத்தலுக்கு சமாதானம் இன்றியமையாததாகும். பல இனமக்கள் செறிந்து வாழும் நாட்டில் சமாதானம் இல்லாது போயின், இனங்களுக்கிடையேயான கசப்புணர்வுகள் வளர்ச்சி பெற்று, அவை காலச்சூழலில் முரண்பாடுகளாக பரிணமித்து, இனக்கலவரங்களாக முகிழ்வடைந்து, பிரிவுகளுக்கு வழிவகுத்து விடுகின்றது. இலங்கையைப் பொறுத்தளவில் இத்தகையதொரு நிகழ்வே நடந்து கொண்டிருக்கிறது. இதற்கான மூல காரணங்கள் ஆட்சிபுரியும் அரசாங்கங்களின் சுயநலமான அரசியல் இலாபங்களேயாகும். இனங்களுக்கிடையேயான சமாதான உணர்வைத் தோற்றுவிக்க ஆட்சியாளர்கள் எப்பொழுதுமே முன்னின்றதில்லை. மாறாக இனப்பகைமைகளைத் தூண்டிவிடும் கைங்கரியத்தையே தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்துள்ளனர்.

இனங்களுககிடையேயான சமாதான வித்துக்களை நடத்தவறியதன் விளைவு பெரும்பான்மை, சிறுபான்மை என்ற முரண்பாடுகள் பிரிவுகள் பூதாகாரமாய் வளர்ந்துள்ளன. இலங்கையின் தேசிய இனங்களுள் தமிழர்களும் அடங்குவதா? என்ற பெரும்பான்மையினரினதும், பௌத்தபீடாதிபதிகளினதும் ஆட்சியாளர்களினதும் விவாத அரங்கங்கள் பல விபரீதமான அரங்கேற்றங்களுக்கு வழியமைத்து கொடுத்துவிட்டது. இனப்பகைமைகளை வெறித்தனமாக ஊக்கிவித்த ஆட்சிப்பீடங்கள் இன்று நாட்டில் சமாதானம் தேவை என்ற கோஷங்களை உலக நாடுகளிடம் கூவித்திரிவது கேலிக்குரியதாகும். நாட்டின் சுபீட்சத்திற்கு சமாதானமும் ஒருமைப்பாடும் இன்றியமையாத தேவையாகும் என்று கோஷமிடும் ஆட்சியாளர்கள் சமாதானத்தை சமாதியாக்கியவர்கள் என்பது யாவருமறிந்த உண்மை. சிறுபான்மை இனம் என்ற முத்திரை குத்தப்பட்டு தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் எவ்வளவு மிருகத்தனமானது, எவ்வளவு சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடந்தேறிவிட்டன. அந்தப் பேச்சுவார்த்தைகள் ஏன் பயனற்றுப்போயின? ஆட்சியாளர்கள் சமாதானம் என்பதை அதன் முழு அர்த்தத்துடன் புரிந்து கொண்டு பேர்ச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தால் அது பயனளித்திருக்கக் கூடும். ஏன் நாட்டில் சமாதானமும், ஒருமைப்பாடும் கூட நிலவியிருக்கக்கூடும். இது நாட்டின் உண்மையான சமாதானத்திற்கு நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் அல்லவே. சமாதானம் என்ற போர்வையில் பெரும்பான்மையினரின் ஆதரவைப்பெற்று தமிழ்மக்களை சமாதியாக்க மேற்கொண்ட முயற்சியே அது. எந்த ஒரு நாட்டிலும் குறிப்பிட்டதொரு இனத்தின் சுதந்திரம் பறிக்கப்படுமாயின் அது முழு நாட்டின் சமாதானத்திற்கும் சவாலாக அமைந்து விடுகின்றது. சாதானம் பற்றிய புரிந்துணர்வுகள் இனங்களுக்கிடையே தோன்றாத வரையில் அதன் போர்வையில் மேற்கொள்ளப்படும் அத்தகைய செயற்பாடுகளும் பயனற்றதாகவே மாறும். தமிழ்மக்கள் வன்முறையில் நாட்டங் கொண்டவர்கள் என்று வரலாற்று ஆதாரங்கள் ஏதுமில்லை. சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு தமிழ் மக்கள் முகங்கொடுக்க தவறியவர்களுமல்லர். இனக்கலவரங்களினாலும் தமிழ் மண்ணில் தற்பொழுது நடைபெற்றுவரும் இனப்படுகொலைகளினாலும் முழுமையாகப் (பாதிப்படைபவர்கள்) பாதிப்படைந்தவர்கள் தமிழ் மக்களே. இருந்தபோதிலும் சமாதான உணர்வை தூக்கியெறிந்தா விட்டார்கள். தமிழ் பேசும் மக்கள் இன்று ஆட்சியாளர் கண்களுக்கு பயங்கரவாதிகளர்கவே காட்சியளித்து வருகின்றனர். சுதந்திரம் மறுக்கப்பட்ட ஒரு இனம் இனவாதச் சேற்றில் மூழ்கியெழும் ஆட்சியாளர்களின் கண்களுக்கு வன்முறையாளர்களாகத் தென்படுவதில் வியப்பேதுமில்லை. உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் தீவிரவாதப் போக்கில் இளைஞர்கள் நாட்டங் கொள்வது உலகெங்கிலும் நடைபெறும் நிகழ்வாகும். சமாதானத்தை வேண்டி தமிழ் தலைவர்களால் கொள்ளப்பட்ட அகிம்சை வழியிலமைந்த உண்ணாவிரதங்கள், மௌன ஊர்வலங்கள், பாதையாத்திரைகள் கணக்கற்றவை. அவைகளுக்குப் பிரதிபலனாக வன்முறைகளே கட்டவிழ்த்து விடப்பட்டன. ஆனால் இன்றுவரை தமிழ்மக்கள் சமாதானத்தின்பால் நாட்டங் கொண்டவர்களாகவே இருந்து வருகின்றார்கள்.

இன்று வல்லரசு நாடுகளால் ஏற்பட்டுவரும் அணுவாயுத அச்சுறுத்தல் சமாதானத்திற்காய் செயற்பட்டு வரும் நாடுகளுக்கு பெரும் சவாலாகவே அமைந்துள்ளது. அத்தோடு வல்லரசு நாடுகளின் ஆயுதத்தயாரிப்பு, ஆயுதப்போட்டி, ஆயுதப்பலப்பரீட்சை, வளர்முகநாடுகள்மீதான ஆக்கிரமிப்பு போன்ற நடவடிக்கைகளால் உலகின் சமாதானத்தை குழிதோண்டிப் புதைப்பதாய் உள்ளது. உலக மக்களின் சமாதான வாழ்விற்காய் உலகெங்கிலும் சமாதான சபைகள், சமாதான நிறுவனங்கள் என்பன அரும்பணியாற்றி வருகின்றன. இந்திய நாட்டின் விடுதலைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் அரும்பணியாற்றிய அண்ணல் மகாத்மா காந்தியடிகளின் அகிம்சை வழியிலமைந்த போராட்டத்தினை அவதானிப்போமாயின் சமாதானம் என்பதன் முழு அர்த்தத்தினையும் புரிந்துகொள்ளலாம். இந்திய நாட்டின் சுதந்திரப் போராட்டம் மகாத்மாகாந்தியின் சமாதான உணர்விலமைந்த அகிம்சை வழிநடத்துதலிலேயே தங்கியிருந்தது. இனங்களுக்கிடையேயான சமாதான நகர்வுகளுக்கு காந்திஜி உதாரண புருஷராகத் திகழ்ந்தார். சமாதானம் பற்றிய தெளிவுகளற்ற ஒரு இனமோ நாடோ போரையும், வன்முறைகளையுமே தொடர்ச்சியாக எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இதற்கு உதா

ரணமாக இலங்கையைக் குறிப்பிடலாம். சிங்கள, தமிழ் மக்களுக்கிடையேயான கசப்புணர்வுகள் வெளிப்பட்ட போதே சமாதானத்தின் அவசியம் பற்றி வலியுறுத்தப் பட்டிருந்தால் இனங்களுக்கிடையேயான பிளவுகள் விரி வடைந்திருக்காது. போருக்கான சாத்தியப்பாடுகளும் தோன்றியிருக்காது. இனங்களுக்கிடையேயான சமா தானம் வலியுறுத்தப்படாததன் விளைவு இன்று பொரு ளாதாரம், அபிவிருத்தி என சகல வாழ்நிலைகளையுமே பாதிக்கிறது. தமிழ் மக்களின் சுதந்திரம் பறிக்கப்பட்ட பொழுது சமாதான வழியிலமைந்த பேச்சுக்கள் தூக்கி வீசப்பட்டன. தமிழின் விடிவிற்காக ஆயுதப்போராட் டத்தை பரிந்தும்கொண்ட விடுதலை ஸ்தாபனங்கள் பலவாகும். அவைகளுக்கிடையேயான ஒருமைப்பாடுகள் தோற்றம் பெறாததின் விளைவு தமிழ் மண்ணில் குருதி யைக் கொப்பளிக்கவைத்துக் கொண்டிருக்கின்றது. ஸ்தா பனங்களுக்கிடையேயான பிரிவுகள் முரண்பாடுகள் யாவும் சமாதானப் பிரக்ஞைகள் அற்ற நிலையாலே யாகும்.

தமிழ் மக்களைப் பொறுத்தளவில் சமாதானம் என்பதன் அவசியம் இன்னும் முழுமையாக வலியுறுத் தப்படவில்லை என்றே கூறவேண்டும். காரணம் மதம், ஜாதி வேற்றுமைகள் தொடர்மரபாக பேணப்படுகின் றன. இத்தகையமரபுகள் அழிக்கப்படும் வரை சமாதா னப் பிரக்ஞைகள் தமிழ் மண்ணில் தோற்றம் பெற வாய்ப்பில்லை. இன்று மனித நேயங்கள் மதிப்பிழந்தும் மனிதாபிமான உணர்வுகள் மரணித்தும் கொண்டிருக் கின்றன. இவற்றிக்கான மூலகாரணங்கள் சமாதானப் பிரக்கைகளுள் ஒருமைப்பாடுகள் என்பன பூரண வளர்ச்சி பெறாமையேயாகும். சமாதானத்திற்கான பங் கேற்றல்கள் ஒவ்வொரு மனிதனதும் கடமையாகும். இந்தக்கடமைகளை அலட்சிப்படுத்தும் ஒவ்வொருவரும் ஏதோவொரு வழியில் வாழ்வில் வீழ்ச்சிகளை சந்தித்துக் கொண்டே இருக்கிறார்கள். சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் இறைமக்களெனப் படுவர் என்று இயேசுக்கிறிஸ்து கூறியுள்ளதை கூர்ந்து அவதானிப்போமாயின் வாழ்வில் சமாதானத்திற்கான தேவைகள் பற்றிய விழிப்புணர்வுகள் நிச்சயம் தோற் றம் பெறும்.

## மூன்று சில்லு சைக்கிள் அன்பளிப்பு

வல்வெட்டித்துறை, சமரபாகுவைச் சேர்ந்த உடல் ஊனமுற்றிருக்கும் செல்வன் சிவகணே சன் ஸ்ரீதரனுக்கு அறவழிப் போராட்டக்குழு இம்மாதம் 4-ம் திகதி ஒரு மூன்று சில்லுச் சைக்கிளை அன்பளிப்புச் செய்துள்ளது.

செல்வன் ஸ்ரீதரனின் சகோதரியும் நடக்க முடியாமல் இருப்பதுடன், இக் குடும்பத்தின் தலைவனான திரு. சிவகணேசனும் காலமாகிவிட் டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## எமது மக்களின் எதிர்காலம் நோக்கி...

அறவழிப் போராட்டக்குழுவின் ஏழாண்டு சேவை நிறைவை முன்னிட்டு, ''எமது மக்களின் எதிர்காலம் நோக்கி...'' எனும் தலைப்பில் நாடகப்போட்டி, வில் லிசைப் போட்டி, கவிதைப் போட்டிகளை குழு நடாத்த வுள்ளது.

இப்போட்டிகளில் பங்குகொள்ள விரும்புவோர் மேலதிக விபரங்களைப் பெற குழுவுடன் தபால் மூலம் தொடர்புகொள்ள வேண்டப்படுகின்றனர்.

பங்குபற்றுபவர்களுக்கான போட்டிகள் யாவும் பெப்பிரவரி மாத நடுப்பகுதியில் நடாத்தப்படும்.

போட்டிகளில் வெற்றிபெறுவோர்க்கான பரிசில்கள் பெப்பிரவரி மாதம் 25-ம் திகதி நடைபெறவுள்ள விழாவில் வழங்கப்படும்.

## அறவழி அறிமுக விழா

''அறவழி'' தமிழ் மாதாந்தப் பத்திரிகையை கிராமிய மக்கள் மத்தியில் அறிமுகம் செய்யும் நோக் குடனும், அறவழி பாலர் கழகங்களின்—பாடசாலை அபிவிருத்திச் சபைகளுக்கு நிதி சார்ந்த வகையில் உதவும் பொருட்டும், 1987 தை மாதம் முதல் ஒவ் வொரு இதழுக்கும், கிராமங்களில் அறவழி அறிமுக விழாக்களை ஏற்பாடு செய்ய பத்திரிகைக் குழு முடிவு செய்துள்ளது.

இவ்வாறு நடாத்தத் திட்டமிட்டுள்ள அறிமுக விழாக்களில் விற்பனை செய்யப்படும் சிறப்புப் பிரதிகள் மூலம் திரட்டும் நிதியில் 75%த்தினை, கிராமங்களில் இயங்குகின்ற பாலர்பாடசாலை அபிவிருத்திச் சபையின் செயல்பாடுகளுக்கு வழங்குவதெனவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

## பாலர் பாடசாலைத் திட்டம்

தமிழ்ப் பிரதேசத்தில் இருக்கின்ற பின்தங்கிய கிராமங்களில் பாலர் கல்விக்கு மேலும் ஊக்கம் கொடுக்கும் பொருட்டு, அறவழிப் போராட்டக்குழு மேலும் பல பாலர் பாடசாலைகளை இவ்வருடத்தில் ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றது.

இத் திட்டத்தில் இணைந்துகொள்ள விரும்பும் கிராமங்கள் குழுப் பணிமனையுடன் தொடர்புகொண்டு மேலதிக விபரங்களைப் பெறலாம்.

# காந்தியப் பொருளாதாரத்தின்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருளியலாகவே இருக்கும். பொருள் வழிபாட்டை வளர்க்கின்ற எளியவர்களை வாட்டி வலியவர்கள் செல்வத்தைக் குவிக்க வழிவகுக்கின்ற பொருளாதாரம் பொய்மையானதாகவும், தாழ்வுற்ற அறிவியலாகவும் இருக்கும். அத்தகைய பொருளாதாரம் அழிவுக்கு வழி வகுக்கின்றது. உண்மையான பொருளாதாரம் சமுதாய நீதிக்காக நிற்கும் வலிமையற்றவர்களையும் சேர்த்து எல்லோருடைய நன்மையையும் சமமாக வளர்க்கும் மதிப்பான வாழ்விற்கு அது இன்றியமையாததாக இருக்கும் என்றும் காந்தியடிகள் கூறுகின்றூர். இவற்றிலிருந்து அண்ணல் பொருளியலைப் பற்றி என்ன கருதுகின்றூரென்பதைத் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

மனித வாழ்க்கையின் நோக்கம் உயர்ந்தது; மகத்தானது. வெறும் கலகமானிடப் பூச்சிகளாக உண்டு வாழ்ந்து மடிவதில் பயனில்லை. மனிதன் தன்னையறிந்து இறைவனை உணரப் பொருளாதார வாழ்வும் துணை செய்ய வேண்டும். ஆதலால் மனிதனை மையமாகக் கொண்ட மனிதனின் வாழ்விற்கு முக்கியத்துவம் தருகின்ற பொருளாதாரத்தைக் காந்தியடிகள் வலியுறுத்துகின்றூர்.

காந்தியடிகள் மனித சமுதாயத்திற்குத் துணை செய்கின்ற ஒரு நிலையான பொருளாதாரத்தை உருவாக்க முயன்றூர், இயற்கையோடு இணைந்து செல்கின்ற பொருளாதார அமைப்பு முறையை உருவாக்க வேண்டியது இன்றைய காலத் தேவையென்பதை அறிந்து உணர்த்துகின்றூர்.

காந்தியப் பொருளாதாரத்தை மேற்போக்காகப் பார்க்கின்றவர்களில் சிலர் இதனை பழமையான, பிற்போக்கான பொருளாதாரச் சிந்தனையாகக் கருதுகின்றனர். உண்மையில் காந்தியப் பொருளாதாரம் புரட்சிகரமானதாகவும், புதுமையானதாகவும் இருப்பதனை ஆழ்ந்து நோக்குபவர்கள் புரிந்து கொள்வார்கள்.

காந்தியப் பொருளாதாரத்தின் பரப்பு மிகவும் விரிந்தது. அது தனி மனிதனில் தொடங்கி குடும்பம், சமுதாயம். நாடு, உலகம் என்று விரிந்து செல்லக் கூடியது. உள்நாட்டிற்கென்று ஒரு பொருளாதாரக் கொள்கையையும் வெளிநாட்டிற்கென்று மற்றென்றையும் கடைப்பிடித்தலைக் காந்தியம் விரும்பவில்லை.

காந்தியடிகள் சிக்கலின் அறக் கூறுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கின்ற உண்மையை நாம் உணர்கின்ற பொழுது காந்தியடிகளின் பொருளாதாரத் தத்துவம் கூடிய சிறப்பினைப் பெறுகின்றது என்று பட்டாச்சர்யா என்ற பொருளியலறிஞர் கூறுகின்றூர்.

## பாப்பரசரின் நத்தார் செய்தி

ரோமிலிருக்கும் சென் பீற்றேர்ஸ் தேவாலயத்தின் மேல்மாடியில் இருந்து பரிசுத்த பாப்பரசர் 2வது அருளப்பர் சின்னப்பர், உலக மக்களுக்கான தமது நத்தார் தினச் செய்தியை பாப்பரசர் சதுக்கத்தில் குழுமியிருந்த இருபதினுயிரம் மக்கள் முன்னிலையில் தெரிவித்தார்.

அவர் தமது செய்தியில், மனிதன் ஏனையவர்களை வெறுப்பதையும், வன்செயல்களையும் கைவிடவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

## 100 மாணவர்களுக்கு உதவும் கல்வித்திட்டம்

அண்மைக்காலத்தில் வடபகுதியில் இடம் பெற்ற வன்செயல்கள் காரணமாக குடும்பத்தில் தலைவர்களை இழந்த குடும்பங்களைச் சேர்ந்த 100 பாடசாலை மாணவர்கள் தமது கல்வியைத் தொடர உதவும் திட்டமொன்றை அறவழிப் போராட்டக்குழு செயற்படுத்தவுள்ளது.

இத்திட்டத்திற்கு உதவ சர்வதேச போர் எதிர்ப்பாளர் இயக்கத்தின் டென்மார்க் கிளை (AMK) முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## நோர்வே தமிழர் உதவி

நோர்வே, தொரணியத்தில் இயங்குகின்ற ஈழத்தமிழர் சங்கத்தின் ஆதரவுடன் வட பகுதியில் ஐந்து பாலர் பாடசாலைத் திட்டங்கள் இவ்வருடம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**அறவழி வாசகர்களுக்கும்**
**அன்பான ஆதரவாளர்களுக்கும்**
**எமது**
**பொங்கல் வாழ்த்துக்கள்**

# திராவிடர்

**சண். காளிதாஸ்**

இவ்வுலகில் திராவிடர்களுக்கு முன் வாழ்ந்தவர் யாவர் என அறிய முடியவில்லை. எனவே, மிகவும் பழமைவானவர் திராவிடர் ஆவர். திராவிடர் சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எவ்வாறு வாழ்ந்தனர் என்பதை அறிய சான்றுகள் கிடைத்துள்ளன.

திராவிடர் இப்போது தென் இந்தியாவில் அதிகமாக வாழ்ந்தாலும், வட இந்தியாவிலும் வசித்து வந்தார்கள் என்று அறிஞர்கள் திட்டவட்டமாகக் கூறுகின்றனர்.

பழங்காலக் குடிகளுள் திராவிடர் மிகவும் நாகரிகத்துடன் வாழ்ந்து வந்தனர். நிலங்களின் இயற்கையமைப்பை அனுசரித்து வாழ்க்கை நடத்திவந்தனர்.

மலைகளிலும் மலைச்சரிவுகளிலும் வாழ்ந்த திராவிடர் குறிஞ்சி நில மக்கள் ஆவர். அவர்களுள் பெரும்பான்மையோர் வேடர்கள். வேடர்கள் மிருகங்களை வேட்டையாடிக் கொன்று அவற்றின் மாமிசத்தை உணவாகவும், தோலை உடையாகவும் பயன்படுத்தியதோடு, கிழங்குகள், பழங்கள், மலைத்தேன் முதலியவற்றைச் சேகரித்து உண்டு வந்தனர். தினை என்ற ஒருவகைத் தானியத்தையும் பயிர் செய்தனர். வில், அம்பு, நீண்ட ஈட்டி என்பவற்றை உபயோகித்தனர். முருகனை கடவுளாக வணங்கினர். காடுகளிலும் அவைகளை அடுத்தும் உள்ள முல்லை நிலத்தில் வாழ்ந்த திராவிடர் ஆயர் என வழங்கப்பட்டனர். ஆயர்கள் மாடு மேய்ப்பதைத் தொழிலாகவும், பசுக்கள் தரும் பாலையும், பாலிலிருந்து பெறப்படும் தயிர், வெண்ணெய் என்பவற்றுடன் அரிசி, வரகு போன்ற தானியங்களையும் தமது உணவாக்கிக் கொண்டனர். அவர்கள் பனை ஓலையால் வேயப்பெற்ற குடிசைகளில் வசித்தார்கள். திருமாலைக் கடவுளாக வழிபட்டார்கள்.

மருதம் எனும் சமவெளி நிலங்களில் ஊர்கள் அமைத்து திராவிடர் பலர் வசித்தனர். பெரிய ஊர்களில் அரசர்கள் இருந்தனர். அரசர் இருந்த ஊரைச் சுற்றிக் கோட்டை இருந்தது. கோட்டைக்கு வெளியில் மரங்களைப் பயிராக்கிச் சிறு காடுகள் அமைத்து அங்கே வீரர்கள் வசித்த வண்ணம் கோட்டையைக் காத்து வந்தனர். வீரர்கள் அம்பு, வாள், ஈட்டி முதலிய ஆயுதங்களை உபயோகித்து வந்தனர்.

மருத நில மக்கள் பயிர்த் தொழில் செய்தனர். அவர்கள் செங்கல்லாலும் கற்களினாலும் கட்டப்பட்ட வீடுகளில் வசித்தனர்.

கடற்கரை ஓரமாக உள்ள நெய்தல் நிலத்தில் வாழ்ந்தவர்கள் பரதவர் எனப்பட்டனர். அவர்களது பிரதான தொழில் மீன்பிடித்தல். சிலர் உப்பு வியாபாரம் செய்தனர், அரிசிக் கூழைப் புளிக்கச் செய்து அதிலிருந்து தேரல் என்ற ஒருவகை மதுவைத் தயாரித்துக் குடித்தனர்.

திராவிடர் நாகரிகமாக வாழ்க்கை நடத்தியதுடன் வெளிநாடுகளுடன் கடல்வழி வியாபாரம் செய்துவந்தனர். விருந்தினர்களை அன்பாக உபசரித்தனர். அரசனிடம் மிகவும் அன்பாக இருந்தனர். போரில் உயிர் துறப்பதை பெரிய பேறாகக் கருதினர்.

திராவிடர் பொன், வெள்ளி முதலிய உலோகங்களைக் கொண்டு பல்வேறு ஆபரணங்களைச் செய்து உபயோகித்தனர். உறுதியான சக்கரங்களை உடைய வண்டிகளில் போக்குவரவு நடத்தினர்.

திராவிடர்களின் முக்கிய தொழில் விவசாயமே. அவர்கள் ஆறுகளிலிருந்து கால்வாய்கள் மூலமாக வயல்களுக்கு நீர் பாய்ச்சினர். பருத்தியிலிருந்து நேர்த்தியான ஆடைகள் செய்தனர். ஆடைகளுக்குச் சாயம் ஏற்றவும் அவர்களுக்குத் தெரிந்திருந்தது.

திராவிடர் பேசி வந்த மொழி தமிழ். திராவிட மன்னர்கள் தமிழில் மிகவும் ஆர்வமுடையவர்களாக இருந்தனர். தங்கள் சபையில் புலவர்கள் பலரை ஆதரித்து வந்தனர்

இசைக் கலையிலும் திராவிடர் சிறந்து விளங்கினர். யாழ் என்னும் ஒருவகை இசைக் கருவியை வாசிப்பதில் சிறந்து விளங்கியவர்கள் பாணர்கள் என அழைக்கப்பட்டனர். யாழ் பாணர்களில் பலர் இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளில் பல நூற்றாண்டு காலமாக வசிக்கின்றனர்.

தமது மூதாதையர்கள் பரம்பரையாக வாழ்ந்து வந்த பகுதிகளில் நசுக்கப்படுவதையும், அழித்தொழிக்கப்படுவதையும் காலம் கடந்தாவது உணர்ந்து கொண்ட இன்றைய சமுதாயம் தாயகக் கோட்பாட்டை முன்னெடுத்திருப்பது பிழையானது என வாதிடுவதோ மறுப்பதோ மடைமையே.

# 5.000 மக்கள் பங்கேற்ற தமிழ் சிறுவர்தின விழா

அறவழிப் போராட்டக் குழுவினுல் பிரகடனப் படுத்தப்பட்டு நடாத்தப்பட்ட தமிழ் சிறுவர்தினவிழா நிகழ்ச்சிகள் மிகவும் கோலாகலமாக மார்கழி 15ஆம் திகதி நடைபெற்றது.

அன்றைய நிகழ்ச்சிகளில் 5000 க்கு மேலான மக்ள் பங்கேற்றனர் என விழா அவதானிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலத்தில் தமிழ்ப் பிரதேசத்தில் நடைபெற்ற மாபெரும் விழாவாக தமிழ் சிறுவர்தினம் கருதப்படுகின்றது.

முப்பது பாலர் பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 1000 சிறுவர்களின் சமாதான ஊர்வலத்துடன் விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

சிறுவர்களின் சமாதான ஊர்வலத்தை சாவகச்சேரி நகராட்சிமன்றின் செயலாளர் திரு. த. நவரத்தினராசா ஆசீர்வதித்து ஆரம்பித்துவைத்தார்.

சமாதான ஊர்வலத்தில் வந்த சிறுவர்கள், அறவழி பணிமனை வாசலில் வைக்கப்பட்டிருந்த மகாத்மா காந்தியின் சிலைக்கு மலரஞ்சலி செலுத்திஞர்கள்.

இந்த ஊர்வலம் விழா மைதானத்தை அடைந்ததும் சமாதானத்துக்காக உழைத்த காந்தி, வள்ளுவர், தந்தை செல்வா, பாரதி, இந்திராகாந்தி வேடத்தில் காட்சி அளித்த சிறுவர்கள் அவர்களை வரவேற்றனர்.

அறநெறிக்காவலர் பேராசிரியர் கு. நேசையாவும் யாழ். பல்கலைக்கழகச் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கு. பரராஜசிங்கமும் இணைந்து மங்கள விளக்கை ஏற்றி வைத்தனர்.

அறவழி போராட்டக்குழுவின் கொடியினை செல்வன் கே.ஜே. சஞ்சீவன் ஏற்றி வைத்தபின், 25 பாலர் பாடசாலைக் கொடிகளையும் அவ்வக் கிராமப் பிரமுகர்கள் எற்றிவைத்தனர்.

மேடையில் வீற்றிருந்த இஸ்லாமிய, கிறிஸ்தவ, இந்துமதத் தலைவர்களின் பிரார்த்தனையைத்தொடர்ந்து சிறுவர்களின் பிரார்த்தனை நிகழ்ச்சி இடம்பெற்றது. மைதானத்திலிருந்த அத்தனை சிறுவர்களும் தம்கைகளை கோர்த்து நின்று "நாமே உலகம்-நாமே சிறுவர்"எனும் பாட்டினை இசைத்தனர்.

பின்னர் "அறவழி" தமிழ் சிறுவர்தினச் சிறப்பிதழ் வெளியீட்டு விழா இடம்பெற்றது. முதல் பிரதியை பேராசிரியர் கு. நேசையா வெளியிட்டு வைக்க, பண்டிதர். எஸ். சிவலிங்கம் பெற்றுக் கொண்டார். இதனைத்தொடர்ந்து சுமார் 150 பிரமுகர்கள் சிறப்பிதழை பேராசிரியரின் அன்புக் கரங்களால் பெற்றுக் கொண்டனர்.

தமிழ்ச் சிறுவர்தின விழா நிகழ்ச்சிகளில் பங்கு கொண்ட சிறுவர்களுக்கான போசாக்குணவுப் பைக் கட்டுகளை, கைதடி வடக்கில் இருக்கும் சைவப் பெரியார் திரு. வேலுப்பிள்ளை முருகேசு வழங்கினுர்.

இதனையடுத்து சிறுவர்களின் பொதுக் கூட்டம் நடைபெற்றது. செல்வன் து. கலானந்தனும், செல்வி த. தமிழினியும் இணைத்தலைவர்களாக வீற்றிருந்து கூட்டத்தினை மிகவும் சிறப்பாக நடாத்தினர்.

செல்வி எஸ். அருணன் வரவேற்புரை நிகழ்த்திஞர். பல சிறுவர்கள் சிறுவர் தினம், சமாதானம்தொடர்பான விடயங்களைத் தொட்டு உரையாற்றினர். செல்வி கா. மனேசாந்தியின் நன்றியுரையிடன் கூட்டம் முடிவுற்றது.

அதன்பின்னர் 25 பாலர் பாடசாலைகளது சிறப்புக் கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அதனைத்தொடர்ந்து பொதுக்கூட்டம், இயக்குனர் திரு. வீ. எஸ். துரைராஜா தலைமையில் ஆரம்பமானது.

பொதுக்கூட்டத்தின் பின் சுகாதார வில்லிசை, இசைநாடகம், பரதநாட்டியம் என்பன இடம்பெற்றன.


அறவழி

## சந்தா விபரம்

**உள்நாடு:**

ஒரு வருடம் ரூபா 24-00
(தபாலில்) ரூபா 30-00
தனிப்பிரதி ரூபா 2-00

**ஐரோப்பிய நாடுகள்**

1 வருடம் ரூபா 130-00
(தபால் செலவு உட்பட)

**அமெரிக்கா / கனடா**

1 வருடம் ரூபா 150-00
(தபால் செலவு உட்பட)

**தொடர்பு கொள்ளவும்:**

ஆசிரியர்
அறவழி
த. பெ. எண் : 2
சாவகச்சேரி.


இப்பத்திரிகை அறவழிப் போராட்டக் குழுவினுல், யாழ். புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1987 தை 13ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.